மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், திருவத்திபுரம் செய்யாற்றின் குறுக்கே ஆற்காடு திண்டிவனம் சாலை கி. மீ. 4½ல் 1961 62–ஆம் ஆண்டில் ரூ. 14,34,931 செலவில் பாலம் ஒன்று கட்டப்பட்டது. 1977 ஆகஸ்டு திங்கள் முடிய சுங்க வரி மூலம் வசூலான தொகை ரூ. 5,95,596·55 ஆகும். மீதியுள்ள தொகையை மேற்படி பாலம் கட்ட செலவான தொகை வட்டியுடன் திரும்பப் பெறும் வரை, சுங்கம் வசூலிக்கப்படும்.

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே, வசூலிக்கப்பட வேண்டிய மீதித் தொகை இன்னும் எவ்வளவு காலத்திற்கு வாங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மீதம் உள்ள தொகை, இன்னும், சுமார் ரூ. 8½ இலட்சம். இன்னும் சுமார் 18 ஆண்டுக் காலத்திற்கு வசூலிக்கப்படும்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, இந்தப் பாலத்திற்கு மட்டும் பிரத்தியேகமாக வசூலிக்கப்பட வேண்டிய காரணம் என்ன? குறிப்பாக, மற்ற பாலங்களுக்கு வசூலிக்கப்படாமல், இந்த ஜில்லாவில் உள்ள இந்தப் பாலத்திற்கு மட்டும் ஏன் வசூலிக்கிறீர்கள்? அதனுடைய அடிப்படைக் கருத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 10 இலட்சத்திற்கு மேல் செலவிட்டுக் கட்டப்பட்டுள்ள மாநில அரசுப் பாலங்கள் அனைத்திலும் சுங்கம் வசூலிக்கப்படுகிறது.

* 297 வினு—

நீலகிரியில் பணிபுரியும் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கு மலைவாசப்படி.

திரு. கு. ரமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன் போக்குவரத்துக் கழகத்தின் கீழ் நீலகிரி மலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மலைவாசப்படி, குளிர் தடுப்பு உடைக்கான படி கொடுக்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு கொடுக்கப்படுகிறது?

1978 பிப்ரவரி 27]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) சேரன் போக்குவரத்துக் கழகத்தின்கீழ் நீலகிரி மற்றும் வால்பாறை மலையில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மாதம் ரூ. 25-க்கு மிகாமல் அவர்களது அடிப்படைச் சம்பளத்தில் 5 சதவீதம் மலைவாசப்படி 1—5—1977-ம் தேதி முதல் வழங்க அரசு ஒப்புதல் அளித்திருக்கிறது. குளிர் தடுப்பு உடைக்கான படி தனியாக வழங்கப்படவில்லை. ஆனுல் கழகச் செலவிலேயே குளிர் தடுப்பு உடைகள் ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்றன.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே, நீலகிரி மலையில் கடுமையான குளிரில் வேலை செய்யக்கூடிய அந்த ஊழியர்களுக்குக் குளிர் தடுப்புக் கம்பளி உடை வழங்கப்படாமல் இருந்தால், அவர்களுடைய சொந்தச் சம்பளத்திலேயே அவர்கள் அதிகச் செலவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதை உணர்ந்து அரசு அதற்கான ஒரு அலவன்ஸ் அந்தக் குளிர் தடுப்பு உடைக்கான அலவன்ஸ் கொடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மலையில் பணிபுரிகிற பணியாளர்களுக்குச் சேரன் போக்குவரத்துக் கழகம் தன்னுடைய சொந்தச் செலவிலேயே குளிருடைகள் வழங்கி வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் சேரன் போக்குவரத்துக் கழகத்தில் வேலையிழந்த சில ஊழியர்கள் பற்றி அமைச்சரிடம் பேச்சுவார்த்தை நடந்ததா? அப்படியானுல், பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்? அவர்களில் எத்தனை பேருக்கு வேலை கொடுக்கப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, மூல வினு மலைவாசப்படி பற்றியும், குளிர் தடுப்பு உடைக்கான படி பற்றியும் ஆகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினரைத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

Krishnagiri-Madras express bus service.

*298. *Q.*—DR. K. SAMARASAM: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether the express bus plying between Krishnagiri and Madras has been cancelled; and

(*b*) if so, the reasons therefor ?